# தமிழகத்தில்

## வழங்கப்படும்

# விருதுகள்!



NITHRA®

nithrabooks.com/pdf_store/ | books@nithra.mobi | Cell: 98659 24040

# தமிழகத்தில் வழங்கப்படும் விருதுகள்

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் மிகவும் திறமையானவர்கள் தான். அப்படிப்பட்டவர்களை மேலும் ஊக்குவிக்க அவர்களின் திறமைகளின் அடிப்படையில் விருது வழங்கி தமிழக அரசு கவுரவப்படுத்தி வருகிறது.

இந்த விருதுகள் திறமைகளை ஊக்குவிப்பதோடு, மேலும் அடுத்த நிலைக்கு அவர்களை கொண்டு செல்கிறது.

இப்படி விருதுகள் ஒவ்வொரு துறைக்கும் ஏற்ப பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக நமது நாட்டின் முக்கிய தலைவர்கள் பெயர்களில் சில விருதுகள் வழங்கப்பட்டு கவுரவிக்கப்படுகின்றன.

அப்படிப்பட்ட விருதுகள் என்னென்ன..? அவற்றின் சிறப்புகள் என்ன? போன்றவை உள்ளிட்ட அனைத்து தகவல்களும் இந்த PDFல்... வாங்க அறிந்து கொள்ளலாம்.

## அப்துல் கலாம் விருது

மறைந்த முன்னாள் குடியரசு தலைவரான ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஐயா அவர்களின் நினைவைப் போற்றும் விதமாக 'டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது' ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று வழங்கப்படுகிறது.

இந்த விருது, விஞ்ஞான வளர்ச்சி, மனிதவியல் மற்றும் மாணவர்களின் நலன் ஆகியவற்றிற்கு பாடுபட்டு வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படும்.

அப்துல் கலாம் விருது பெறுவோர்களுக்கு 8 கிராம் தங்கத்தால் ஆன பதக்கம் மற்றும் 5 லட்சம் ரூபாய் ரொக்கம், பாராட்டுச் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படும். இந்த விருது 2015 முதல் வழங்கப்படுகிறது.

### விருது பெற்றவர்கள்

- 2015 - ந.வளர்மதி (இஸ்ரோ திட்ட இயக்குனர்) - **இவர் முதல் அப்துல் கலாம் விருது பெற்ற பெண் விஞ்ஞானி ஆவார். அரியலூர் மாவட்டத்தை சேர்ந்தவர்.**
- 2016 - டாக்டர் சண்முகம் (சென்னை மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி)
- 2017 - எஸ்.பி.தியாகராஜன் (ஒரு சிறந்த விஞ்ஞானி - சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணை அதிபர்)
- 2018 - தக்ஷா குழு (ஆளில்லா விமானம் குறித்த ஆய்வுகள்)

- 2019 - கே.சிவன் (இஸ்ரோ தலைவர்) - கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்தவர்.
- 2020 - ச.ஆனந்தம் செல்வகுமார் (ஆனந்தம் இளைஞர் அறக்கட்டளை) - இவர் அறக்கட்டளையின் மூலம் ஏழை மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்கி வருகிறார். இவர் சென்னையை சேர்ந்தவர்.

## கல்பனா சாவ்லா விருது

தமிழ்நாடு அரசால் அளிக்கும் விருதுகளில் ஒன்று கல்பனா சாவ்லா விருது.

இந்தியாவில் பிறந்து அமெரிக்க குடியுரிமை பெற்ற விண்வெளி வீரங்கனை கல்பனா சாவ்லாவின் நினைவாக தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட வீர, தீர, சாகசச் செயல் புரியும் இளம் பெண்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சுதந்திர தின விழாவின்போது இந்த விருது வழங்கப்படுகிறது.

இந்த விருதாளர்களுக்கு ரூ.5 லட்சத்திற்கான காசோலையும், பாராட்டு சான்றிதழும், ஒரு பதக்கமும் வழங்கப்படுகிறது.

### விருது பெற்றவர்கள்

- 2003 - ரேஷ்மா சர்மா, கராத்தே வீராங்கனை.
- 2004 - அமலமேரி, கன்னியாகுமரி (ரயில் விபத்தை தடுத்தவர்).
- 2005 - மீரா, சுல்தான்பேட்டை, கோவை (சுனாமியின் போது பலரை காப்பாற்றியவர்).
- 2006 - வசந்தா கந்தசாமி, சென்னை (ஐ.ஐ.டி கணித பேராசிரியை)
- 2007 - நிர்மலா பால்சாமி
- 2008 - பி.ஜோதி நிர்மலா ஐ.ஏ.எஸ். (பத்மநாபபுரம் ஆர்.டி.ஓ வாக இருந்தபோது மணல் கொள்ளையை தடுத்தவர்).
- 2009 - டாக்டர் ராஜ மகேஷ்வரி (சென்னை மருத்துவர்), ராஜலட்சுமி (மதுரை தடகள வீராங்கனை), புஷ்பாஞ்சலி (உறுப்புதானம் அளித்த ஹிதேந்திரன் தாயார், திருக்கழுக்குன்றம்)
- 2010 - ஜெ.தீபா, மதுரை (மாற்றுத் திறனாளி, குண்டு எறிதல் வீராங்கனை)
- 2011 - எஸ். சங்கீதா (துணிச்சலான வருவாய்த்துறை வட்டார அலுவலர், திருச்சி) - இவர் சட்டசபைத் தேர்தலின்போது ஆம்னி பஸ்சில் கொண்டு

செல்லப்பட்ட, கோடிக்கணக்கான பணத்தை தனிநபராக விரட்டிச் சென்று பறிமுதல் செய்தவர் ஆவார்.

- 2012 - ராஜலட்சுமி, அவரின் மகள் சிவரஞ்சனி. (திருடனை பிடித்தவர்கள், கடலூர் மாவட்டம்)
- 2013 - சுகி பிரமிளா, வட்டாட்சியர், நாகர்கோவில் (உணவுப் பொருட்கள் கடத்தலை தடுத்தவர்)
- 2014 - ஆர். பொன்னி, துணிச்சலான காவல் துறை அதிகாரி
- 2015 - ஜோதிமணி, ஈரோடு, பார ஊர்தி ஓட்டுநர்.

  2016 - ஜெயந்தி, மயான பணியாளர், நாமக்கல் மாவட்டம்.
- 2017 - செல்வி. பிரீத்தி, (மாற்றுத் திறனாளி, திருவண்ணாமலையில் தொண்டு நிறுவனம் நடத்தி வருபவர்)
- 2018 - முத்துமாரி (கட்டையால் சிறுத்தையை விரட்டிய கோவை மாவட்டம் வால்பாறை, பெரியகல்லார் கிராமத்தை சேர்ந்தவர்).
- 2019 - திருமதி பி.ரம்யாலட்சுமி, தமிழக மீன்வளத்துறை பெண் அதிகாரி.
- 2020 - செந்தமிழ்ச்செல்வி, முத்தம்மாள், ஆனந்தவல்லி - பெரம்பலூர் மாவட்டம், (நீரில் மூழ்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இளைஞர்களை காப்பாற்றிய வீர மங்கைகள்)

## இராசராசன் விருது

மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பெரும் பரிசு எனவும் இராசராசன் விருது குறிப்பிடப்படுகிறது.

தமிழக அரசும், தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகமும் இணைந்து வழங்கும் விருது தான் இராசராசன் விருது. இவ்விருது 1984ம் ஆண்டு நிறுவப்பட்டது.

### விருது பெற்றவர்கள்

- 1984 - கவியோகி சுத்தானந்த பாரதியார் (பாரதசக்தி மகாகாவியம் என்ற நூலுக்காக முதல் இராசராசன் விருதைப் பெற்றார்).
- 1995 - சுரதா - தேன்மழை நூலுக்காக இராசராசன் விருதைப் பெற்றார்.
- 1995 - மு.கருணாநிதி - தென்பாண்டி சிங்கம் நூலுக்காக இராசராசன் விருதைப் பெற்றார்.

# ஔவையார் விருது

தமிழ்நாடு அரசின் விருதுகளில் ஒன்று ஔவையார் விருது. இந்த விருது 2012ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

சமூகச் சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மத நல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில் ஒருவருக்கு உலக மகளிர் தினத்தன்று இந்த விருது வழங்கப்படுகிறது.

இந்த விருதுக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், எட்டு கிராம் அளவிலான தங்கப்பதக்கமும், தகுதிச் சான்றும் அளிக்கப்படுகிறது.

## விருது பெற்றவர்கள்

- 2012- திருமதி. ஓய். ஜி. பார்த்தசாரதி (சிறந்த பெண்மணி)
- 2013 - மரு.வி.சாந்தா (புற்று நோய் மருத்துவத் துறையில் சிறந்த சேவையாற்றிய சென்னை அடையாறில் உள்ள புற்று நோய் நிறுவனத்தின் தலைவர்)
- 2014 - மரு.கே.மாதங்கி - (காஞ்சி காமகோடி சைல்ட்ஸ் டிரஸ்ட், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர்).
- 2015 - சாந்தி ரங்கநாதன் - (சமூக செயற்பாட்டாளர் குடிப்பழக்கத்திற்கு அடிமையானோரை மீட்கும் மருத்துவமனையை இந்தியாவிலேயே முதன்முதலில் சென்னையில் தொடங்கியவர்).
- 2016 - எம்.சாரதா மேனன் - (இந்தியாவின் முதல் பெண் மனநல மருத்துவர் மற்றும் ஸ்கார்ப் என்னும் தொண்டு நிறுவனத்தை தொடங்கிய பெண்மணி)
- 2017 - பத்மா வெங்கட்ராமன் - (சென்னை, அகில இந்திய மாதர் சங்கத்தின் தலைவர்)
- 2018 - சின்னப்பிள்ளை, மதுரை மாவட்டம் - (தன் கிராமத்திலும், சுற்றுப்புற கிராமங்களிலும் மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து, மகளிர் பொருளாதார முன்னேற்றத்திற்குக் காரணமாக விளங்கியவர்).
- 2020 - கண்ணகி, திருவண்ணாமலை மாவட்டம். (பல்வேறு சமூகப்பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்).

## கோட்டை அமீர் விருது

தமிழ்நாட்டில் மத நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு அவர் ஆற்றிய சீரிய பணிக்காக ஆண்டுதோறும் சென்னை மெரினா கடற்கரையில் நடைபெறும் குடியரசு தினவிழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ''கோட்டை அமீர் மத நல்லிணக்க விருது'' வழங்கப்படுகிறது.

இவ்விருது மதநல்லிணக்கத்திற்காக போராடி தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட திரு.கோட்டை அமீர் அவர்களின் நினைவாக வழங்கப்படுகிறது.

இவ்விருது தங்கமுலாம் பூசிய வெள்ளிப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு ரூ.25,000 கொண்டதாகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை ஆணையர், சென்னை மற்றும் காவல் துறை தலைவர் (நுண்ணறிவு), சென்னை ஆகியோர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேர்வுக் குழுவின் மூலம் விருதாளர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

### விருது பெற்றவர்கள்

- 2012 - டாக்டர்.ஜே.இராஜா முகமது - (திருவருள் பேரவை நடத்திவரும் மத நல்லிணக்க மாத இதழான திருவருள் இதழின் ஆசிரியராக இருந்தவர்)
- 2014 - திரு.ஏ.ஆர்.பஷீர் அகமது, கோவை மாவட்டம் (2013-ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி அமைதியாக நடைபெற காரணமாக இருந்ததோடு, மத நல்லிணக்கத்திற்காகவும் பாடுபட்டு வந்தவர்)
- 2015 - திரு.துல்கருணை பாட்சா
- 2016 - திரு.எம்.பி.அபுபக்கர்
- 2017 - டாக்டர் ஐ.சாதிக் பாஷா, திருவண்ணாமலை மாவட்டம் - (2014 மற்றும் 2017ம் ஆண்டு மதக் கலவரம் உருவாவதை தடுக்க பணியாற்றினார்)
- 2018 - டாக்டர்.ஏ.எம்.இக்ரம்
- 2021 - அப்துல் ஜபார், கோவை மாவட்டம்.

## திருவள்ளுவர் விருது

திருவள்ளுவர் விருது பண்டைய கவிஞர்-தத்துவஞானி, உலகப் பொதுமறையை தந்த திருவள்ளுவரின் நினைவாக தமிழக அரசு வழங்கும் விருதாகும்.

திருக்குறள் இலக்கியத்திற்கும், அதன் தத்துவத்திற்கும் சிறப்பான பங்களிப்பை அளித்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

இந்த விருது 1986ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் தினமான தை மாதத்தின் 2ம் நாளில் தமிழ்நாடு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக வழங்கப்படுகிறது.

திருவள்ளுவர் விருதினை பெறுபவருக்கு ரூ.1,00,000 பணம், 1 பவுன் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்

**விருது பெற்றவர்கள்**

- 1986 - தவத்திரு குன்றக்குடி அடிகளார் (சமயம், இலக்கியம், மட்டுமன்றி பேச்சுத்திறன், எழுத்துத்திறன், இசை போன்று பல துறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர், முதல் திருவள்ளுவர் விருது பெற்றவர் ஆவார்.)
- 1987 - திரு. கி.ஆ.பெ. விசுவநாதம். (தமிழகத்தின் திருச்சியைச் சேர்ந்த தமிழ் உணர்வாளர் ஆவார்.)
- 1988 திரு.ச.தண்டபாணி தேசிகர் (திருக்குறள், திருவாசகம் போன்றவற்றின் பெருமைகளை எடுத்துக்கூறும் வகையில் சிறந்த இரு நூல்களை இயற்றியவர்)
- 1989 - திரு.வ.சுப. மாணிக்கம் (தன் வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவே வாழ்ந்து, தமிழ் வளர்ச்சியைப் பற்றியே சிந்தித்து பல நிலையினும் சிறந்தோங்கி தமிழ்ப் பணிக்காகவே வாழ்ந்த மூதறிஞர்.)
- 1990 - திரு.கு.ச. ஆனந்தன் - (திருக்குறள் ஆய்வு, இந்திய ஆட்சி மொழி சிக்கல்கள் ,தமிழ்நாட்டின் உரிமைகள், தேசிய இனச் சிக்கல் ஆகியன குறித்து நூல்கள் எழுதியுள்ளார்.)
- 1991 - திரு.சுந்தர சண்முகனார, கடலூர். (திருக்குறள் தெளிவுரை, திருக்குறள் தெளிவு, தெவிட்டாத திருக்குறள் ஆகிய வெளியீடுகளின் வழியாகவும் தன்னுடைய நூல்கள் பலவற்றிலும் திருக்குறளின் மேன்மையை எடுத்துரைத்தவர்)
- 1992 - டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்
- 1993 - திரு. கல்லை தே.கண்ணன்
- 1994 - திருக்குறளார் திரு.வீ.முனிசாமி
- 1995 - திருமதி க.சிவகாமசுந்தரி
- 1996 - முனைவர் மு.கோவிந்தசாமி
- 1997 - முனைவர் கு.மோகனராசு
- 1998 - முனைவர் இரா.சாரங்கபாணி
- 1999 - முனைவர் வா.செ.குழந்தைசாமி
- 2000 - திரு. த.சி.க. கண்ணன்

- 2001 - பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்
- 2002 - முனைவர் இ. சுந்தரமூர்த்தி
- 2003 - முனைவர் கு. மங்கையர்க்கரசி
- 2004 - திரு. இரா. முத்துக்குமாரசாமி
- 2005 - புலவர் ப. அரங்கசாமி
- 2006 - முனைவர் ஆறு. அழகப்பன்
- 2007 - முனைவர் க.ப. அறவாணன்
- 2008 - தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்
- 2009 - முனைவர் பொன் கோதண்டராமன் (பொற்கோ)
- 2010 - முனைவர் ஐராவதம் மகாதேவன்
- 2011 - முனைவர் பா.வளன் அரசு
- 2012 - புலவர் செ. வரதராசன்
- 2013 - கலைமாமணி முனைவர் ந. முருகன் (சேயோன்)
- 2014 - கவிஞர் யூசி. தைவான் (திருவள்ளுவர் விருது பெற்ற முதலாவது அயற்நாட்டினர்)
- 2015 - திருக்குறள் க.பாஸ்கரன்
- 2016 - முனைவர் வி.ஜி. சந்தோசம்
- 2017 - புலவர் பா. வீரமணி
- 2018 - முனைவர் கோ. பெரியண்ணன்
- 2019 - முனைவர் மு.கௌ.அன்வர் பாட்சா
- 2020 - திரு.ந.நித்தியானந்த பாரதி
- 2021 - முனைவர் வைகைச்செல்வன், மதுரை மாவட்டம்.

## மகாகவி பாரதியார் விருது

பாரதியார் விருது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம் வழங்கப்படும் விருதாகும்.

பாரதியாரின் படைப்புகள் அனைத்தையும் முழுமையாகப் பயின்று ஆய்வு மேற்கொண்டு பாரதியாரைப் பற்றிய கவிதைகள் மற்றும் பாரதியின் புகழ் பரப்பும் வகையில் கவிதை, உரைநடை நூல்கள் படைத்தோர், பிற வகையில் தொண்டு செய்தோர், செய்பவர்களுக்கு மகாகவி பாரதியார் விருது வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை அரசாணை மூலம் 1997ம் ஆண்டிலிருந்து இவ்விருது வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் தினமான தை மாதத்தின் 2ம் நாளில் இவ்விருது வழங்கப்படுகிறது.

மகாகவி பாரதியார் விருதினை பெறுபவருக்கு ரூ.1,00,000 பணம், 8 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்

## விருது பெற்றவர்கள்

- 1997 - கவிஞர் மதிவண்ணன்
- 1998 - திரு.குமரி அனந்தன்
- 1999 - திரு.வலம்புரி ஜான்
- 2000 - கவிஞர் வாலி
- 2001 - திரு.பெ.சு.மணி
- 2002 - திரு.கே.வி. கிருஷ்ணன்
- 2003 - திரு.ரா.அ.பத்மநாபன்,
- 2004 - திரு.சீனி. விசுவநாதன்
- 2006 - திரு.தமிழருவி மணியன்
- 2007 - கவிஞர் சௌந்தரா கைலாசம்
- 2008 - முனைவர் இரா.மணியன்
- 2009 - டாக்டர் சேக்கிழார் அடிப்பொடி தி.ந. இராமச்சந்திரன்
- 2010 - திரு.நா.மம்மது
- 2011 - முனைவர் இ.ரா.பிரேமா
- 2012 - பாரதிக் காவலர் கு.இராமமூர்த்தி
- 2013 - முனைவர் கு.ஞானசம்பந்தன்
- 2014 - முனைவர் இளசை சுந்தரம்
- 2015 - கவிஞர் பொன்னடியான்
- 2016 - பேராசிரியர் முனைவர் ச. கணபதிராமன்
- 2017 - முனைவர் சு. பாலசுப்பிரமணியன் (எ) பாரதிபாலன்
- 2018 - திரு.மா.பாரதி சுகுமாரன்
- 2019 - முனைவர் ப.சிவராஜி
- 2020 - கவிஞர் பூவை செங்குட்டுவன்

# பாவேந்தர் பாரதிதாசன் விருது

**பாவேந்தர் பாரதிதாசன் விருது** என்பது தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி துறையின் கீழ் இயங்கும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு வருடந்தோறும் வழங்கப்படும் ஒரு விருதாகும்.

1978ம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

பாவேந்தர் பாரதிதாசன் விருதினை பெறுபவருக்கு ரூ.1,00,000 பணம், 8 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்

ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் தினமான தை மாதத்தின் 2ம் நாளில் இவ்விருது வழங்கப்படுகிறது.

## விருது பெற்றவர்கள்

- 1978 - கவிஞர். சுரதா
- 1979 - கவிஞர் திரு.எஸ்.டி.சுந்தரம் மறைந்த கவிஞர் வாணிதாசன்
- 1980 - கவிஞர் முத்துலிங்கம்
- 1981 - கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
- 1982 - கவிஞர் புத்தனேரி சுப்ரமணியம்
- 1983 - மறைந்த கவிஞர் வகாப்
- 1984 - கவிஞர் நா.காமராசன்
- 1985 - கவிஞர் ஐ.உலகநாதன்
- 1986 - கவிஞர் மு. மேத்தா
- 1987 - கவிஞர் முடியரசன்
- 1988 - கவிஞர் பொன்னிவளவன்
- 1989 - கவிஞர் அப்துல் ரகுமான்
- 1990 - கவிஞர் வேழவேந்தன்
- 1990 - கவிஞர் புலமைப்பித்தன்
- 1990 - கவிஞர் பொன்னடியான்
- 1990 - கவிஞர் கோவை இளஞ்சேரன்
- 1990 - கவிஞர் சாமி பழனியப்பன்
- 1990 - கவிஞர் முடியரசு
- 1990 - கவிஞர் அரிமதி தென்னகம்

- 1990 - கவிஞர் முருகு சுந்தரம்
- 1990 - கவிஞர் ஈரோடு தமிழன்பன்
- 1990 - கவிஞர் நா.ரா. நாச்சியப்பன்
- 1990 - கவிஞர் மு.பி.பாலசுப்பிரமணியம்
- 1990 - கவிஞர் கவிதைப்பித்தன்
- 1990 - கவிஞர் அரசு மணிமேகலை
- 1990 - கவிஞர் நிர்மலா சுரேஷ்
- 1990 - கவிஞர் பொன்மணி வைரமுத்து
- 1990 - கவிஞர் தி.நா. அறிவொளி
- 1990 - கவிஞர் வெற்றியழகன்
- 1990 - கவிஞர் புதுமைவாணன்
- 1990 - கவிஞர் மா. செங்குட்டுவன்
- 1990 கவிஞர் கருவூர் கன்னல்
- 1990 - கவிஞர் அருள்மொழி
- 1991 - கவிஞர் சாலை இளந்திரையன்
- 1991 - பாவலர் பாலசுந்தரம்
- 1991 - கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம்
- 1991 - கவிஞர் வல்லம் வேங்கடபதி
- 1991 - திருமதி சௌந்தரம் கைலாசம்
- 1991 - கவிஞர் லெனின் தங்கப்பா (ம.இலெ.தங்கப்பா)
- 1991 - கவிஞர் நீலமணி
- 1991 - கவிஞர் த.கோவேந்தன்
- 1991 - கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்
- 1991 - கவிஞர் மீ. இராசேந்திரன்
- 1991 - கவிஞர் தமிழ்நாடன்
- 1991 - கவிஞர் எழில்முதல்வன் (திரு.ப.இராமலிங்கம்)
- 1991 - கவிஞர் சோதிதாசன்
- 1991 - கவிஞர் ஆலந்தூர் மோகனரங்கம்
- 1991 - கவிஞர் ஆ.பழனி
- 1991 - கவிஞர் நன்னியூர் நாவரசன்
- 1991 - கவிஞர் இளந்தேவன்

- 1991 - கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம்
- 1991 - கவிஞர் பனப்பாக்கம் சீத்தா
- 1991 - கவிஞர் அமுதபாரதி
- 1991 - கவிஞர் மரியதாசு
- 1991 - கவிஞர் திரு.தமிழழகன் (வே. சண்முகசுந்தரம்)
- 1991 - திரு.பெரி. சிவனடியான்
- 1992 - கவிஞர் இ.முத்துராமலிங்கம்
- 1993 - புலவர் பெ.அ.இளஞ்செழியன்
- 1994 - கவிஞர் கரு.நாகராசன்
- 1995 - கவிஞர் அ.மறைமலையான்
- 1996 - கவிஞர் இரா.வைரமுத்து
- 1997 - முனைவர் சரளா இராசகோபாலன்
- 1998 - கவிஞர். முரசு நெடுமாறன் (மலேசியா)
- 1999 - முனைவர் சிலம்பொலி செல்லப்பன்
- 2000 - பாவலர் மணிவேலன்
- 2001 - கவிஞர் மணிமொழி
- 2002 - முனைவர் ச.சு.இராமர் இளங்கோ
- 2003 - பேரா.முனைவர் அ.தட்சிணாமூர்த்தி
- 2004 - பேரா.லெ.ப.கரு.இராமநாதன்
- 2006 - முனைவர் கா. செல்லப்பன்
- 2007 - திருச்சி திரு. மு.சீ. வெங்கடாசலம்
- 2008 - கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன்
- 2009 - கவிஞர் தமிழ்தாசன்
- 2010 - முனைவர் இரா. இளவரசு
- 2011 - கவிஞர் ஏர்வாடி சு.இராதாகிருஷ்ணன்
- 2012 - பேரா. முனைவர் சோ.ந. கந்தசாமி
- 2013 - முனைவர் திருமதி இராதா செல்லப்பன்
- 2014 - கவிஞர் கண்மதியன்
- 2015 - முனைவர் வீ.ரேணுகாதேவி
- 2016 - கவிஞர் கோ. பாரதி
- 2017 - திரு.க. ஜீவபாரதி

- 2018 - கவிஞர் தியாரூ
- 2019 - திரு.த.தேனிசை செல்லப்பா
- 2020 - திரு.அறிவுமதி (எ) மதியழகன்பா

## தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது

தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது என்பது தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி துறையின் கீழ் இயங்கும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம் தமிழ் எழுத்தாளர் ஒருவருக்கு தமிழறிஞர் தமிழ்த்தென்றல் திரு.வி.க. நினைவாக வருடந்தோறும் வழங்கப்படும் ஒரு விருதாகும்.

1979 ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது பெறுபவருக்கு ரூ.1,00,000 பணம், 8 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் தினமான தை மாதத்தின் 2ம் நாளில் இவ்விருது வழங்கப்படுகிறது.

### விருது பெற்றவர்கள்

- 1979 - திரு. ஜெகசிற்பியன்
- 1980 - திரு. நாரண துரைக்கண்ணன்
- 1981 - திரு. அ.கி.பரந்தாமனார்
- 1982 - திருக்குறளார் வீ.முனிசாமி
- 1983 - பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார்
- 1984 - திரு. கோ.வி. மணிசேகரன்
- 1985 - டாக்டர் க.த.திருநாவுக்கரசு
- 1986 - கவிஞர் கா.மு.ஷெரீப்
- 1987 - டாக்டர் நா. சுப்புரெட்டியார்
- 1988 - மணவை முஸ்தபா
- 1989 - டாக்டர் தமிழண்ணல்
- 1990 - புலவர் கா.கோவிந்தன் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்
- 1991 - திருமதி இராஜம் கிருஷ்ணன்
- 1992 - திரு.அ.மு. பரமசிவானந்தம்
- 1993 - முனைவர் தி.முத்து கண்ணப்பர்

- 1994 - புலவர் இரா. இளங்குமரன்
- 1995 - பேராசிரியர் கா.பொ.இரத்தினம்
- 1996 - பேராசிரியர் மா.நன்னன்
- 1997 - திரு. மா.சு. சம்பந்தன்
- 1998 - புலவர் மருதவாணன்
- 1999 - கவிஞர் மன்னர்மன்னன்(புதுச்சேரி)
- 2000 - பேரா.கா. சிவத்தம்பி (யாழ்ப்பாணம்)
- 2001 - முனைவர் ப. இராமன்
- 2002 - பேராசிரியர் தி.வே. கோபாலய்யர்
- 2003 - முனைவர் ம.ரா.போ. குருசாமி
- 2004 - முனைவர் ச.அகத்தியலிங்கம்
- 2005 - விருது வழங்கப்படவில்லை
- 2006 - எழுத்தாளர் திரு.க. திருநாவுக்கரசு
- 2007 - முனைவர் த. பெரியாண்டவன்
- 2008 - முனைவர் ச.பா. அருளானந்தம்
- 2009 - திரு. வெ. அண்ணாமலை (எ) இமையம்
- 2010 - பேரா. அ. அய்யாசாமி
- 2011 - முனைவர் நா. ஜெயப்பிரகாசு
- 2012 - முனைவர் பிரேமா நந்தகுமார்
- 2013 - திரு.செ. அசோகமித்திரன்
- 2014 - முனைவர் கரு.நாகராசன்
- 2015 - திரு. கி. வைத்தியநாதன்
- 2016 - முனைவர் மறைமலை இலக்குவனார்
- 2017 - எழுத்தாளர் திரு. வை. பாலகுமாரன்
- 2018 - முனைவர் கு.கணேசன்
- 2019 - முனைவர் சே. சுந்தரராசன்
- 2020 - திரு.வி.என்.சாமி

# கி.ஆ.பெ. விசுவநாதம் விருது

கி.ஆ.பெ. விசுவநாதம் விருது என்பது தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி துறையின் கீழ் இயங்கும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம் தமிழ்நெறியில் தமிழ்த் தொண்டாற்றும் ஒருவருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் ஒரு விருதாகும்.

2000ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

**கி.ஆ.பெ. விசுவநாதம் விருது** பெறுபவருக்கு ரூ.1,00,000 பணம், 8 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் தினமான தை மாதத்தின் 2ம் நாளில் இவ்விருது வழங்கப்படுகிறது.

**விருது பெற்றவர்கள்**

- 2002 - முனைவர் மு.தமிழ்க்குடிமகன்
- 2003 - முனைவர் ச.வே.சுப்பிரமணியன்
- 2004 - முனைவர் பு.பா.இராஜஇராஜேஸ்வரி
- 2007 - கவிஞர் கா. வேழவேந்தன்
- 2008 - பேராசிரியர் த. பழமலய்
- 2009 - திருமதி. தாயம்மாள் அறவாணன்
- 2010 - முனைவர் இரா.மதிவாணன்
- 2011 - முனைவர் இரா. மோகன்
- 2012 - முனைவர் நா. இராசகோபாலன் ( மலையமான் )
- 2013 - முனைவர் வ. ஜெயதேவன்
- 2014 - பேராசிரியர் ஏ.எம்.ஜேம்ஸ்
- 2015 - திரு.இரா.கோ. இராசாராம்
- 2016 - முனைவர் திருமதி மீனாட்சி முருகரத்தனம்
- 2017 - பேராசிரியர் முனைவர் ப. மருதநாயகம்
- 2018 - திரு.சூலூர் கலைப்பித்தன்
- 2019 - மருத்துவர் மணிமேகலை கண்ணன்
- 2020 - முனைவர் வீ.சேதுராமலிங்கம்

# பெருந்தலைவர் காமராஜர் விருது

பெருந்தலைவர் காமராஜர் விருது ஊரெங்கும் பள்ளிகள் திறந்து, இலவசக் கல்வித்திட்டம், சத்துணவுத் திட்டம் முதலிய திட்டங்கள் மூலமாக தமிழ் மக்கள் முன்னேற வழிவகுத்த வரலாறு படைத்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அடிச்சுவட்டில், தமிழக மக்களுக்கு தொண்டாற்றி வரும் ஒருவருக்கு வழங்கப்படும் ஒரு விருதாகும்.

2006ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

பெருந்தலைவர் காமராஜர் விருது பெறுபவருக்கு ரூ.1,00,000 பணம், 8 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்

ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் தினமான தை மாதத்தின் 2ம் நாளில் இவ்விருது வழங்கப்படுகிறது.

## விருது பெற்றவர்கள்

- 2006 - திருமதி ஏ.எஸ்.பொன்னம்மாள்
- 2007 - திரு.ஏ.ஆர். மாரிமுத்து
- 2008 - திரு. கோபண்ணா
- 2009 - திரு.ஆர்.சொக்கர்
- 2010 - திருமதி ஜெயந்தி நடராசன்
- 2011 - திண்டிவனம் திரு.கே.இராமமூர்த்தி
- 2012 - திரு.சிங்கார வடிவேல்
- 2013 - திரு.கி.அய்யாறு வாண்டையார்
- 2014 - திரு.கருமுத்து தி. கண்ணன்
- 2015 - மருத்துவர் இரா. வேங்கடசாமி
- 2016 - திரு. தி. நீலகண்டன்
- 2017 - முனைவர் தா.ரா. தினகரன்
- 2018 - திரு.பழ.நெடுமாறன்
- 2019 - முனைவர் மா.சு.மதிவாணன்
- 2020 - முனைவர் ச.தேவராஜ்

## பேரறிஞர் அண்ணா விருது

பேரறிஞர் அண்ணா விருது தமிழ் சமுதாயம் முன்னேற்றம் காண அயராது பாடுபடும் ஒருவருக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக இந்த விருது அளிக்கப்படுகிறது. 2006ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

பேரறிஞர் அண்ணா விருது பெறுபவருக்கு ரூ.1,00,000 பணம், 8 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் தினமான தை மாதத்தின் 2ம் நாளில் இவ்விருது வழங்கப்படுகிறது.

### விருது பெற்றவர்கள்

- 2006 - திரு. ஆர்.எம். வீரப்பன்
- 2007 - திருமதி சாரதா நம்பி ஆரூரன்
- 2008 - திரு.அ.மறைமலையான்
- 2009 - முனைவர் திரு.ஔவை நடராஜன்
- 2010 - திரு.து.ரவிக்குமார்
- 2011 - திரு.இரா.செழியன்
- 2012 - திரு.கே.ஆர்.பி.மணிமொழியன்
- 2013 - திரு.பண்ருட்டி ச.இராமச்சந்திரன்
- 2014 - பேராசிரியர் திருமதி கஸ்தூரி ராஜா
- 2015 - பேராசிரியர் முனைவர் பர்வத ரெஜினா
- 2016 - கவிஞர் கூரம் மு.துரை
- 2017 - திரு.அ. சுப்ரமணியன்
- 2018 - பேராசிரியர் மு.அய்க்கண்
- 2019 - முனைவர் கோ.சமரசம்
- 2020 - அமரர் கடம்பூர் எம்.ஆர். ஜனார்த்தனன்

## தமிழ்த்தாய் விருது

தமிழ்த்தாய் விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும்.

தமிழகம், பிற மாநிலங்கள் மற்றும் பிற நாடுகளில் வாழும் தமிழர்கள், தங்களது பண்பாட்டு வேர்களைக் காப்பதற்காகப் பல்வேறு அமைப்புகளை

உருவாக்கி மொழி இலக்கியம், கலை ஆகியப் பணிகளை மேற்கொண்டு வரும் சிறந்த அமைப்புக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

2012ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

தமிழ்த்தாய் விருது பெறுபவருக்கு 5 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்

ஒவ்வொரு ஆண்டும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு நாளில் இவ்விருது வழங்கப்படுகிறது.

**விருது பெற்றவர்கள்**

- 2012 - மதுரைத் தமிழ்ச்சங்கம்
- 2013 - தில்லி தமிழ்ச் சங்கம்
- 2014 - நவி மும்பைத் தமிழ்ச் சங்கம்
- 2015 - திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம்
- 2016 - மாணவர் மன்றம்
- 2017 - பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்
- 2018 - புவனேசுவர் தமிழ்ச் சங்கம்
- 2019 - சிகாகோ தமிழ்ச் சங்கம்
- 2020 - வி.ஜி.பி.உலகத் தமிழ்ச் சங்கம், சென்னை

## கபிலர் விருது

கபிலர் விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும்.

பழந்தமிழர் தொன்மை, வரலாறு, நாகரீகம், பண்பாடு முதலியன புலப்படும் வகையிலும்; தமிழுக்கு உயிரூட்டும் வண்ணம் படைப்புகளைப் புனைந்து வழங்கும் கவிஞர் மற்றும் அறிஞர் பெருமக்களுக்கு இந்த விருது அளிக்கப்படுகிறது.

2012ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

கபிலர் விருது பெறுபவருக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், எட்டு கிராம் அளவிலான தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்

ஒவ்வொரு ஆண்டும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு நாளில் இவ்விருது வழங்கப்படுகிறது.

**விருது பெற்றவர்கள்**

- 2012 - முனைவர் அ.அ. மணவாளன்
- 2013 - கவிஞர் முத்துலிங்கம்
- 2014 - முனைவர் ஆ.இலலிதா சுந்தரம்
- 2015 - கவிஞர் பிறைசூடன்
- 2016 - முனைவர் எல்.கே. அக்னிபுத்திரன்
- 2017 - முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்
- 2018 - புலவர் மி.காசுமான்
- 2019 - புலவர் வெற்றியழகன்
- 2020 - திரு.செ.ஏழுமலை

## உ.வே.சா விருது

உ.வே.சா விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும்.

கல்வெட்டுகள், அகழ்வாய்வுகள், ஓலைச்சுவடிகள், அரிய கையெழுத்துப் படிகள், கிடைத்தற்கரிய நூல்கள் முதலியவற்றை அரும்பெரும் முயற்சியால் கண்டறிந்தும், வெளிக்கொணர்ந்தும் தமிழுக்கு வளம் சேர்க்கும் பணிகளை மேற்கொள்ளும் தமிழறிஞர்களின் சேவைகளைப் பாராட்டும் விதமாக இந்த விருது அளிக்கப்படுகிறது.

2012ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

உ.வே.சா விருது பெறுபவருக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், எட்டு கிராம் அளவிலான தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்

ஒவ்வொரு ஆண்டும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு நாளில் இவ்விருது வழங்கப்படுகிறது.

**விருது பெற்றவர்கள்**

- 2012 - புலவர் செ. இராசு
- 2013 - பேரா. ம.வே. பசுபதி
- 2014 - திரு.ம. அழகுராஜ் (எ) மருது அழகுராஜ்
- 2015 - முனைவர் குடவாயில் மு. பாலசுப்பிரமணியன்
- 2016 - முனைவர் ம.அ. வேங்கடகிருஷ்ணன்

- 2017 - திரு.சு.கிருட்டினமூர்த்தி
- 2018 - திரு.நடன.காசிநாதன்
- 2019 - திரு.வே.மகாதேவன்
- 2020 - திரு.கி.இராஜநாராயணன்

## கம்பர் விருது

கம்பர் விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும்.

கம்பராமாயணத்தின் உயரிய கருத்துக்களைப் பரப்பும் சிறந்த அறிஞருக்கு இந்த விருது அளிக்கப்படுகிறது.

2013ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

கம்பர் விருது பெறுபவருக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், எட்டு கிராம் அளவிலான தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்

ஒவ்வொரு ஆண்டும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு நாளில் இவ்விருது வழங்கப்படுகிறது.

### விருது பெற்றவர்கள்

- 2013 - முனைவர் பால இரமணி
- 2014 - முனைவர் செ.வை.சண்முகம்
- 2015 - திரு கோ.செல்வம்
- 2016 - திரு. இலங்கை ஜெயராஜ்
- 2017 - திரு.சுகி.சிவம்
- 2018 - முனைவர் க.முருகேசன்
- 2019 - முனைவர் சரசுவதி இராமநாதன்
- 2020 - மருத்துவர் எச்.வி.ஹண்டே

## சொல்லின் செல்வர் விருது

சொல்லின் செல்வர் விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும்.

சிறந்த இலக்கியப் பேச்சாளருக்கு இந்த விருது அளிக்கப்படுகிறது.

2013ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

சொல்லின் செல்வர் விருது பெறுபவருக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், எட்டு கிராம் அளவிலான தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு நாளில் இவ்விருது வழங்கப்படுகிறது.

**விருது பெற்றவர்கள்**

- 2013 - முனைவர் ம. லோகநாயகி
- 2014 - மருத்துவர் சுதா சேசையன்
- 2015 - முனைவர் சோ. சத்தியசீலன்
- 2016 - திரு.பி. மணிகண்டன் அவர்கள்
- 2017 - முனைவர் வைகைச் செல்வன்
- 2018 - திரு. ஆவடிக்குமார்
- 2019 - சிந்தனைக் கவிஞர் முனைவர் கவிதாசன்
- 2020 - திரு.நாகை முகுந்தன்

## உமறுப் புலவர் விருது

உமறுப் புலவர் விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும்.

தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றி வரும் தமிழ் அறிஞருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

2014ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

உமறுப் புலவர் விருது பெறுபவருக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்

ஒவ்வொரு ஆண்டும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு நாளில் இவ்விருது வழங்கப்படுகிறது.

**விருது பெற்றவர்கள்**

- 2014 - முனைவர் சேமுமு.முகமதலி
- 2015 - திரு.மு.சாயபு மரைக்காயர்
- 2016 - பேராசிரியர் முனைவர்
- 2017 - திரு.ஹாஜி எம்.முகம்மது யூசுப்

- 2018 - பேராசிரியர் சா.நசீமாபானு
- 2019 - திரு.லியாகத் அலிகான்
- 2020 - திரு.ம.அ.சையத் அசன் (எ) பாரிதாசன்

## ஜி.யு.போப் விருது

ஜி.யு.போப் விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும்.

தமிழ் மொழியில் இருக்கும் இலக்கியங்களை பிற மொழிகளில் மொழிபெயர்க்கும் சிறந்த மொழிபெயர்ப்பாளருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

2014ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

ஜி.யு.போப் விருது பெறுபவருக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்.

ஜி.யு.போப் விருது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் திங்களில் நடைபெறும் சித்திரைத் திருநாளில் வழங்கப்படுகிறது.

**விருது பெற்றவர்கள்**

- 2014 - திரு.ஜெ.நாராயணசாமி
- 2015 - மருத்துவர் சுதா சேசையன்
- 2016 - திருமதி வைதேகி ஹெர்பர்ட்
- 2017 - திருமதி கோ.இராசேசுவரி கோதண்டம்
- 2018 - திரு.கு.கோ.சந்திரசேகரன் நாயர்
- 2019 - திரு.மரிய ஜோசப் சேவியர்
- 2020 - முனைவர் திருமதி உல்ரீகே நிகோலசு, செருமனி

## இளங்கோவடிகள் விருது

இளங்கோவடிகள் விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும்.

இளங்கோவடிகளின் நடையையொட்டி புதிய காப்பியம் படைப்பவருக்கோ அல்லது சிலப்பதிகாரத்தின் புகழ் பரப்பி வருபவருக்கோ இந்த விருது அளிக்கப்படுகிறது.

2015ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

இளங்கோவடிகள் விருது பெறுபவருக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்.

இளங்கோவடிகள் விருது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் சித்திரைத் திருநாளில் வழங்கப்படுகிறது.

**விருது பெற்றவர்கள்**

- 2015 - முனைவர் திருமதி ஜி.டி. நிர்மலா மோகன்
- 2016 - திரு. நா. நஞ்சுண்டன்
- 2017 - முனைவர் வெ.நல்லதம்பி
- 2018 - சிலம்பொலி சு.செல்லப்பன்
- 2019 - கவிக்கோ ஞானச்செல்வன் (எ) கோ. திருஞானசம்பந்தம்
- 2020 - திரு.மா.வயித்தியலிங்கன்

## முதலமைச்சர் கணினித் தமிழ் விருது

முதலமைச்சர் கணினித் தமிழ் விருது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்படும் விருது ஆகும்.

கணினி வழியில் தமிழ் மொழி உலகெங்கும் பரவும் வகையில் கணினித்தமிழ் வளர்ச்சிக்காகச் சிறந்த தமிழ் மென்பொருள்களை உருவாக்குபவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது

2013ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது

முதலமைச்சர் கணினித் தமிழ் விருது பெறுபவருக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்

**விருது பெற்றவர்கள்**

- 2013 - முனைவர் ந.தெய்வசுந்தரம்
- 2014 - திரு து.குமரேசன்
- 2015 - திரு.செ. முரளி (செல்வ முரளி)
- 2016 - அல்டிமேட் மென்பொருள் தீர்வகம்
- 2017 - திரு.வை.மதன் கார்க்கி
- 2018 - முனைவர் த.நாகராசன்
- 2019 - திரு.சே.இராஜாராமன்

## அம்மா இலக்கிய விருது

அம்மா இலக்கிய விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும்.

மகளிர் இலக்கியங்களைப் படைப்பதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தித் தொண்டாற்றி வரும் பெண் படைப்பாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் இந்த விருது அளிக்கப்படுகிறது.

2016ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

அம்மா இலக்கிய விருது பெறுபவருக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்

**விருது பெற்றவர்கள்**

- 2016 - திருமதி ஹம்சா தனகோபால்
- 2017 - முனைவர் மீ.சு.ஸ்ரீஇலட்சுமி, சிங்கப்பூர்
- 2018 - முனைவர் உலகநாயகி பழனி
- 2019 - திருமதி உமையாள் முத்து
- 2020 - முனைவர் தி.மகாலட்சுமி

## சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருது

சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும்.

தரமான பிறமொழிப் படைப்புகளைச் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யும் 10 மொழி பெயர்ப்பாளர்களுக்கு ஆண்டுதோறும் இந்த விருது அளிக்கப்படுகிறது.

2015ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருது பெறுபவருக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்

சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் சித்திரைத் திருநாளில் வழங்கப்படுகிறது

**விருது பெற்றவர்கள்**

- 2016 - திருமதி நாகலட்சுமி சண்முகம்
- 2016 - திரு. அ. ஜாகிர் உசேன்
- 2016 - திரு அல்லா பிச்சை (எ) முகம்மது ஃபரிஸ்டா
- 2016 - திருமதி உமா பாலு
- 2016 - முனைவர் கா. செல்லப்பன்

- 2016 - செல்வி வி. சைதன்யா
- 2016 - திரு. சி. முருகேசன்
- 2016 - திரு. கு. பாலசுப்பிரமணியன்
- 2016 - திரு. ச. ஆறுமுகம் பிள்ளை
- 2016 - முனைவர் கே.எஸ். சுப்பிரமணியன்
- 2017 - திரு.நெல்லை சு.முத்து
- 2017 - திரு.தி.வ.தெய்வசிகாமணி (தெசிணி)
- 2017 - திரு.ஆ.செல்வராசு (எ) குறிஞ்சிவேலன்
- 2017 - முனைவர் ஆனைவாரி ஆனந்தன்
- 2017 - திரு.மறவன் புலவு க.சச்சிதானந்தன்
- 2017 - திருமதி வசந்தா சியாமளம்
- 2017 - முனைவர் இரா.கு. ஆல்துரை
- 2017 - பேராசிரியர் சி.அ.சங்கரநாராயணன்
- 2017 - திருமதி ஆண்டாள் பிரியதர்சினி
- 2017 - முனைவர் தர்லோசன் சிங் பேடி
- 2018 - திரு.யூமா வாசுகி
- 2018 - திரு.இலட்சுமண இராமசாமி
- 2018 - அரிமா மு.சீனிவாசன்
- 2018 - திரு.க.குப்புசாமி
- 2018 - மருத்துவர் சே.அக்பர் கவுசர்
- 2018 - முனைவர் இராசலட்சுமி சீனிவாசன்
- 2018 - திரு.செ.செந்தில்குமார் (எ) ஸ்ரீகிரிதாரிதாசு
- 2018 - முனைவர் பழனி அரங்கசாமி
- 2018 - திரு.சு.சங்கர நாராயணன்
- 2018 - செல்வி ச.நிலா
- 2019 - திரு.சா.முகம்மது யூசுப் (இவருக்கு பதில்) திரு. ஐ. அல் அமீன்(மகன்)
- 2019 - திரு.க.ஜ.மஸ்தான் அலீ
- 2019 - பேராசிரியர் சிவ.முருகேசன்
- 2019 - முனைவர் ந.கடிகாசலம்
- 2019 - திரு.மரபின் மைந்தன்(முத்தையா)
- 2019 - திருமதி வத்சலா

- 2019 - மருத்துவர் முருகுதுரை
- 2019 - திரு.மாலன் (எ) வே.நாராயணன்
- 2019 - திருமதி கிருசாங்கினி (எ) பிருந்தா நாகராசன்
- 2019 - திரு.அ.மதிவாணன்
- 2020 - திரு.சோ.சேசாச்சலம்
- 2020 - முனைவர் இராம.குருநாதன்
- 2020 - திரு.ப.குணசேகர்
- 2020 - முனைவர் பத்மாவதி விவேகானந்தன்
- 2020 - திருமதி சு.ஜோதிர்லதா கிரிஜா
- 2020 - திரு.ஜெ.இராம்கி (எ) இராமகிருட்டினன்
- 2020 - சுவாமி விமூர்த்தானந்தர்
- 2020 - திருமதி மீரா ரவிசங்கர்
- 2020 - திருமதி திலகவதி
- 2020 - திரு.கிருட்டின பிரசாத்

## சிங்காரவேலர் விருது

சிங்காரவேலர் விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும்.

தமிழில் அறிவியல் கருத்துக்களை நூலாக எழுதுபவர்களிலும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும், சமத்துவ கொள்கைக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும் போராடுபவர்களிலும் சிறந்த ஒருவருக்கு இந்த விருது அளிக்கப்படுகிறது.

2018ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

சிங்காரவேலர் விருது பெறுபவருக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்.

சிங்காரவேலர் விருது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் சித்திரைத் திருநாளில் வழங்கப்படுகிறது.

### விருது பெற்றவர்கள்

- 2018 - திரு.பா.வீரமணி
- 2019 - திரு.அசோகா சுப்பிரமணியன் (எ) சோ. கா. சுப்ரமணியன்
- 2020 - திரு.ஆ.அழகேசன்

## அயோத்திதாசப்பண்டிதர் விருது

அயோத்திதாசப்பண்டிதர் விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும்.

சமத்துவம், பொதுவுடைமை, தமிழியல் ஆகியவற்றில் தனக்கென தனிமுத்திரைப் பதித்த தகைமையாளர் தமிழறிஞர் அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் நினைவாக இந்த விருது அளிக்கப்படுகிறது.

இலட்சிய நோக்கோடு செயலாற்றும் ஒருவருக்கு ஆண்டுதோறும் அயோத்திதாசப் பண்டிதர் விருது வழங்கப்படும்.

2019ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

அயோத்திதாசப்பண்டிதர் விருது பெறுபவருக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்.

அயோத்திதாசப்பண்டிதர் விருது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் சித்திரைத் திருநாளில் வழங்கப்படுகிறது.

### விருது பெற்றவர்கள்

- 2019 - புலவர் வே. பிரபாகரன்
- 2020 - முனைவர் கோ.ப.செல்லம்மாள்

## மறைமலையடிகளார் விருது

மறைமலையடிகளார் விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும்.

தனித் தமிழில் படைப்புகள் அருகிவரும் நிலையில் தனித் தமிழில் படைப்புகளை உருவாக்கும் படைப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் இந்த விருது அளிக்கப்படுகிறது.

2019ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

மறைமலையடிகளார் விருது பெறுபவருக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்

மறைமலையடிகளார் விருது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் சித்திரைத் திருநாளில் வழங்கப்படுகிறது

### விருது பெற்றவர்கள்

- 2019 - புலவர் ப.முத்துக்குமாரசுவாமி
- 2020 - திரு.மறை.தி.தாயுமானவன்

## தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் விருது

தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் விருது தமிழ் மொழியில் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றியும், பிறமொழிக் கலப்பின்றி எழுதியும் வெளியிடப்பட்டு வரும் நாளிதழ், வாரஇதழ் மற்றும் திங்களிதழ் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ஓர் இதழைத் தெரிவு செய்து மூன்று விருதுகள் வழங்கப்படும்.

இவ்விருது ஒவ்வொன்றிற்கும் 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், கேடயமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்.

2020ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் விருது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் சித்திரைத் திருநாளில் வழங்கப்படுகிறது

### விருது பெற்றவர்கள்

- 2020 - தினமணி நாளிதழ்
- 2020 - கல்கி வாரஇதழ்
- 2020 - செந்தமிழ் திங்களிதழ்

## அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது

அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது சமரச நெறிகளால் ஆன்மீகத் தொண்டாற்றும் ஒருவருக்கு வழங்கப்படுகிறது.

இவ்விருது பெறுவோர்களுக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்.

2020ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் சித்திரைத் திருநாளில் வழங்கப்படுகிறது

### விருது பெற்றவர்கள்

- 2020 - முனைவர் ஊரன் அடிகள்

## காரைக்கால் அம்மையார் விருது

காரைக்கால் அம்மையார் விருது காரைக்கால் அம்மையாரின் படைப்பிலக்கிய நெறிகளில் தமிழ்த் தொண்டாற்றி வரும் மகளிர் ஒருவருக்கு வழங்கப்படுகிறது.

இவ்விருது பெறுவோர்களுக்கு 1 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்.

2020ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

காரைக்கால் அம்மையார் விருது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் சித்திரைத் திருநாளில் வழங்கப்படுகிறது

**விருது பெற்றவர்கள்**

- 2020 - முனைவர் மோ.ஞானப்பூங்கோதை

## தமிழ்ச்செம்மல் விருது

தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் ஆர்வலர்களுக்கு அவர்களின் தமிழ்த் தொண்டினைப் பெருமைப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ்ச்செம்மல் விருது வழங்கப்படுகிறது. மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு இவ்விருது வழங்கப்படும்.

இவ்விருது பெறுவோர்களுக்கு 25,000 ரூபாய் பரிசுத் தொகையும், தகுதிச்சான்றும் வழங்கப்படும்.

2015ஆம் ஆண்டிலிருந்து இந்த விருது வழங்கப்படுகிறது.

**விருது பெற்றவர்கள்**

**சென்னை மாவட்டம்**

- 2015 - திரு.வேம்பத்தூர் (எம்) கிருஷ்ணன்
- 2016 - கவிஞர் பாரதி சுகுமாரன்
- 2017 - திரு.வே.பிரபாகரன்
